DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 3

| | |
|---|---|
| Name | : Jhony Chellappa |
| Father's Name | : Manogar |
| Age | : 41 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 9th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது, மாதவரம் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2010 முதல் 2013 வரை கே7, ICF காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். முதல் எதிரி கே7, ICF காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். இரண்டாவது எதிரி கே7, ICF காவல் நிலையத்தில் குற்றப்பிரிவில் காவலராக பணிபுரிந்தார். மூன்றாவது எதிரி கே7, ICF காவல் நிலையத்தில் காவலராகவும், ஆய்வாளரின் ஓட்டுநராகவும் பணிபுரிந்தார். கடந்த 11.01.2012 அன்று மதியம் 1 மணிமுதல் இரவு 9 மணி வரை ரோந்து வாகனத்தில் பொறுப்பு அதிகாரியாக பணி நியமிக்கப்பட்டிருந்தேன், அந்த பணி நிமித்தமாக கே7, ICF காவல் நிலைய எல்லைக்

குட்பட்ட Constable Road அருகிலுள்ள ரயில்வே பள்ளிக்கு செல்லும் ரோட்டில் இரண்டு ஆண்கள் மற்றும் ஒரு பெண் நின்று கொண்டிருந்தார்கள்,அவர்களிடம் சென்று விசாரித்த போது அங்கிருந்த ஒரு ஆண், தனது பெயர் தினேஷ் என்றும், அருகிலுள்ள பெண்ணை காண்பித்து அவர் காஞ்சனா என்றும் அவர் தனது மாமன் மகள் என்றும் கூறினார். மேலும் அவர் மற்றொரு ஆணை காண்பித்து இவர் தன்னை போலீஸ் என்றும், அந்த ஏரியாவை சேர்ந்தவர் என்றும் அங்கு நிற்க கூடாது என்றும் கூறி அவரிடமிருந்து போனை வாங்கியதாகவும் காவல் நிலையத்தில் விசாரணை முடித்து போனை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறியதாகவும் கூறினார். மேலும், அங்கு போலீஸ் வாகனம் வருவதை பார்த்து போனை திருப்பி தினேஷிடமே கொடுத்து விட்டதாகவும் கூறினார். இது குறித்து அருகிலிருந்த காக்கி பேண்ட் அணிந்திருந்த நபரிடம் விசாரித்த போது அவர் தனது பெயர் நித்யராஜ் என்றும், அயனாவரம் காவல் நிலைய Friends of Police என்றும் கூறினார். நான் அவரிடம் இதே போன்று செல்போன் பறித்த சம்பவம் நடந்துள்ளதால் காவல் நிலையம் வந்து விசாரணை முடிந்து செல்லும்படி கூறினேன். அவர் வர மறுத்து தன்னைப்பற்றி கே2, அயனாவரம் காவல் நிலைய ஆய்வாளரிடம் விசாரியுங்கள் என்று கூறினார். நான் உடனே, அப்போதைய அயனாவரம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.கனகராஜ் என்பவரிடம் விசாரித்த போது நல்ல பையன்தான், தற்போது ஒரு மாதமாக காவல் நிலைய பணிக்கு வருவதில்லை என்றும் கூறினார். நான் ஆய்வாளரிடம் நித்யராஜ், காவல் நிலைய விசாரணைக்கு வர மறுக்கிறார் என கூறினேன், போனை நித்யராஜிடம் கொடுங்கள் நான் அவரை விசாரணைக்கு வர சொல்லுகிறேன் என்று அவர் கூறினார், நான் எனது போனை நித்யராஜிடம் கொடுக்க அவர் ஆய்வாளரிடம் பேசிவிட்டு விசாரணைக்கு வர சம்மதித்தார். நித்யராஜ் வாகனத்தை எங்களோடு பணியிலிருந்த Friends of Police சுனில்

என்பவரிடம் கொடுத்து காவல் நிலையத்திற்கு எடுத்து வர சொன்னோம். தினேஷையும் அவருடன் வந்த பெண்ணையும் நிலையத்தின் இரு சக்கர வாகனத்தில் காவல் நிலையத்திற்கு வர சொல்லிவிட்டு நித்யராஜை ரோந்து வாகனத்தில் ஏற்றிக் கொண்டு வாகனத்தின் ஓட்டுநர் நடராஜ் சகிதம் காவல் நிலையம் வந்தோம். நடந்த சம்பவம் குறித்து அப்போதைய சட்டம் ஒழுங்கு ஆய்வாளர் திரு.கந்தகுமார், அவர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன். அவர் குற்றப்பிரிவில் ஒப்படைக்கும்படி கூறினார். நித்யராஜ், அவரது வாகனத்தின் சாவி, அவரது வாகனத்திலிருந்த லத்தி ஆகியவற்றை குற்றப்பிரிவு ஆய்வாளர் திரு.ராமலிங்கம் அவர்களிடம் சுமார் இரவு 8.45 மணியளவில் ஒப்படைத்தேன். பணி முடித்து வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் காலை 7 மணிக்கு மீண்டும் நிலைய பணிக்கு திரும்பினேன். அப்போது, நித்யராஜை காவல் நிலையத்தில் பார்த்தேன். இந்த சம்பவம் தொடர்பாக 12.01.2012 வழக்கு பதிவு செய்து 14.01.2012 அன்று நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாக கேள்விப்பட்டேன். 16.01.2012 அன்று நித்யராஜ் சிறையிலிருந்த போது இறந்ததாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக CBCID ஆய்வாளர் திரு. செல்வின் சாந்தகுமார் அவர்கள் என்னை விசாரித்தார். பின்னர், 30.05.2022 அன்று திருவள்ளூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆஜராகி 164 கு.வி.மு.ச வாக்குமூலம் கொடுத்தேன். அந்த 164 கு.வி.மு.ச வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான், **அது அ.சா.ஆ.2**. பின்னர், 26.10.2022 அன்று CBCID துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

11.01.2012 சுற்றுக்காவல் பொது நாட்குறிப்பில் தினேஷ் வகையறா சம்பந்தப்பட்ட மேற்சொன்ன சம்பவங்கள் குறித்தும், நித்யராஜை நான் விசாரணைக்கு அழைத்தது

குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சுற்றுக்காவலில் ஒருவரை காவலுக்கு எடுக்கும்போது, அதுகுறித்து பொதுநாட்குறிப்பில் குறிப்பிட வேண்டியது காவல் நிலையாணைகள்படி அவசியமானது என்றால் சரிதான். 11.01.2012 அன்று காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் பாரா புத்தகத்தில் நித்யராஜை பாரா வசம் ஒப்படைத்தது சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, கைது செய்தால்தான் பாரா புத்தகத்தில் பதிவு செய்வோம், விசாரணைக்காக அழைத்து வந்ததால் பதிவு செய்யவில்லை. எங்களுடைய சட்டம் ஒழுங்குபொது நாட்குறிப்பில் நித்யராஜை விசாரணைக்கு அழைத்தது சம்பந்தமாக குறிப்பிட்டேனா என்றால் குற்றப்பிரிவில் ஒப்படைத்து விட்டதால் நான் சட்டம் ஒழுங்குபொது நாட்குறிப்பில் அது குறித்து பதிவு செய்யவில்லை. சந்தேக நபரை அழைத்து வந்து வேறொரு காவலர் பொறுப்பில் விடும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் என்னவென்றால், சந்தேக நபரை அழைத்து வந்தால் பொதுநாட்குறிப்பில் பதிவிட்டு தான் ஒப்படைக்க வேண்டும், ஆனால் குற்றப்பிரிவு ஆய்வாளர் மேற்படி விசாரணையில் எடுக்கக்கூடிய முடிவுகள் குறித்து தெரியாததால், முரண்பாடுகளை தவிப்பதற்காக பொதுநாட்குறிப்பில் பதிவிடவில்லை. எ.சா.ஆ.1 புகார், உதவி ஆய்வாளராகிய எனக்கு தான் முகவரியிடப்பட்டுள்ளது என்றால் உதவி ஆய்வாளர் என்றுதான் உள்ளது. அந்த புகார் 12.01.2012 அன்று கொடுத்ததாக உள்ளது. குற்றப்பிரிவு பொதுநாட்குறிப்பில் 12.01.2012 அன்று இரவு 11.30 மணிக்கு தினேஷ், நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தாகவும் அதன் அடிப்படையில் கே7, கிரைம் எண்.24/2012 வழக்கு பதிவு செய்ததாகவும் உள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.2**. 13.01.2012 அன்று பொதுநாட்குறிப்பில் 23.30 மணியளவில் வழக்கின் புகார்தாரர் தினேஷ்,அசோகன், காஞ்சனா மற்றும் சரளா ஆகியோர்கள் சகிதம் மேற்படி வழக்கின் எதிரி நித்யா என்ற

நித்யராஜ் என்பவரை கையில் கட்டுக் காயங்களுடனும், இரண்டு கால்களிலும் அடிபட்டும்ட நிலையத்தில் ஆஜர் செய்ததாக குறிப்புள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.3**. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 11.01.2012 அன்றிரவு தினேஷ், காஞ்சனா மற்றும் நித்யராஜை பார்க்கவில்லை என்றாலும், 12.01.2012 அன்றுதான் தினேஷ், காஞ்சனா வகையறா மற்றும் பொதுமக்கள் இறந்த நித்யராஜை அடித்து கொண்டிருந்ததை பார்த்து நான் அவரை பிரித்து விரட்டியனுப்பினேன் என்றால் சரியல்ல. நான், தினேஷை காவல் நிலையம் வர சொல்லி ஒரு புகார் கொடுக்கும்படி கூறினேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் அயனாவரம் காவல் ஆய்வாளர் கனகராஜிடம் நான் தொலைபேசியில் பேசவில்லை என்றாலும், அவர் நித்யராஜ் குறித்து கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் ஓட்டேரி காவல் நிலையத்தில் ஆய்வாளராக 2022ம் ஆண்டு பணிபுரிந்துள்ளேன். அப்போது அ.சா.2 ன் பேரில் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து தடுப்புக் காவலில் வைத்தேன் என்றால்

ஞாபகமில்லை. அ.சா.2, தினேஷ், த.பெ.வேலுமணி, A Category Rowdy, History Sheeter6/2018 என்று தொடங்கப்பட்ட சரித்திர பதிவேடு தற்போது வரையில் நிலுவையிலுள்ளது என்றால் அது குறித்து ஞாபகமில்லை. அ.சா.2 சரித்திர பதிவேடு குற்றவாளி என்பது எனக்கு தெரியும் என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஓட்டேரி காவல் நிலையத்தில் ஆய்வாளராக இருக்கும்போதுதான் CBCID என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 12.01.2012 அன்று காலை பணிக்கு வரும்போது நித்யராஜை காவல் நிலையத்தில் பார்த்திருக்க வாய்ப்பில்லை

என்றால் சரியல்ல. 11.01.2012 முதல் 14.01.2012 வரை நித்யராஜ் குற்றப்பிரிவு ஆய்வாளர் பொறுப்பில் இருந்ததாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 13.01.2012 அன்றிரவு 11.30 மணியளவில் நித்யாவை திரேக பரிசோதனை செய்து பாரா வசம் ஒப்படைத்ததாக உள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.4**. 14.01.2012 அன்று காலை 7 மணிக்கு நித்யராஜை சம்பவ இடத்தை அடையாளம் காட்டவும், வழக்கு சொத்தை மீட்கவும் பார்ட்டி சகிதம் அழைத்து சென்றதாக சுற்றுக் காவல் விடுவிப்பு பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.5.** அதே நாளில் 11.30 மணிக்கு நித்யாவை பாரா வசம் ஒப்படைத்ததாக குறிப்புள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.6**. அதே தேதியில் 16.00 மணியளவில் நித்யா என்ற நித்யராஜை 5வது மாநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு எடுத்து செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குறிப்பு மட்டும் **எ.சா.ஆ.7**. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் 11.01.2012 அன்று நான் சுற்றுக்காவலின் போது, நித்யா என்ற நித்யராஜை பார்க்கவில்லை என்றாலும் விசாரணைக்கு அழைத்து வரவில்லை என்றாலும் அவ்வாறு அழைத்து வந்திருந்தால் பொதுநாட்குறிப்பிலும், ரோந்து சுற்றுக்காவல் பதிவேட்டிலும் பதிவு செய்திருப்பேன் என்றாலும், அழைத்து வராததால்தான் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கனகராஜ் ஆய்வாளரிடம் பேசியது சம்பந்தமாக CBCID போலீசார் Call Details Records பெற்றார்களா என்பது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 12.01.2012 ல் தினேஷ் வகையறா மற்றும் நான் அடித்து விரட்டியதில்தான் நித்யா என்ற நித்யராஜிற்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. CBCID போலீசார் சொல்லிக் கொடுத்தபடி நான் பொய்யான வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |